# அறவழி

# NONVIOLENCE

வெளியீடு

அறவழிப்

போராட்டக் குழு

அஞ்சல் பெட்டி எண்: 2

சாவகச்சேரி

அறம் 1 மாத இதழ் ⁂ 1986 மார்கழி பக்கம் 12 ⁂ விலை 3-00 வழி 8


## அன்பு என்னும் புதுமலரின் வண்ணங்கள் சிறுவர்களே!



"இன்றைய செல்வம் தாமே ஆகி

நாளைய உலகை ஆக்கிடும் சிறுவர்,

இவர் தான் எங்கள் வளங்கள்

இவர் நலம் பேணல்

நம் கடனன்றோ...."

## உள்ளே....


- ☐ அறநோக்கில்....
- ☐ ஆசிச் செய்தி......
- ☐ அன்பும் அறிவும்......
- ☐ வாழை......
- ☐ அறமொழி.....
- ☐ நமது குழந்தைகள்......
- ☐ இலட்சிய மனிதன்......
- ☐ கலப்படம்......
- ☐ இந்திராகாந்தி......
- ☐ காந்தி படம்......
- ☐ வன்முறைபற்றி....
- ☐ லட்டும் தட்டும்....
- ☐ இன்னும் பல




* தமிழ் சிறுவர் தின சிறப்பிதழ் *

# அறநோக்கில்

## அன்பான சிறுவர்களே!

வணக்கம். தமிழ் சமுதாயத்தின் வருங்கால நற்பிரஜைகளாகிய உங்களிடம்தான் இந்த நாட்டின் எதிர்காலமே இருக்கிறது. நாம் வாழும் சமுதாயத்திற்கு எந்தெந்த வகைகளில், எந்தெந்த வழிகளில் உதவலாம் என்று இந்த வயதில் இருந்தே நீங்கள் சிந்திக்கவேண்டும்.

உங்கள் மத்தியில் மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்தவும், சிறுவர் மத்தியில் நல்லெண்ணம், சகோதரத்துவம், விசுவாசம், ஒற்றுமை உணர்வினை உருவாக்கும் அரிய நோக்குடனும் அறவழிப் போராட்டக் குழுவினராகிய நாம், ஒவ்வொரு வருடமும் மார்கழி 15ம் திகதியை ''தமிழ் சிறுவர் தினம்'' எனப் பிரகடனப்பதெத்தியுள்ளோம். எமது இப்பிரகடனத்தின் முதல் அடியாக, இவ்வருடம் ''தமிழ் சிறுவர் தினத்தினை''க் கோலாகலமாகக் கொண்டாடி, தமிழ் சிறுவர்களின் எழுச்சிக்கும் உயர்ச்சிக்கும் வழி வகுத்துள்ளோம். எமது இப்பணியை தமிழ் கூறும் நல்லுலகம் நிச்சயம் பாராட்டி வரவேற்கும் என்பதில் எமக்கு எவ்வித ஐயமுமில்லை.

எம்மால் முனைப்பெடுக்கப்பட்ட இத்தினம் தமிழ் மண்ணின், பட்டி தொட்டி எங்கும் நல்லமுறையில் கொண்டாடப்படல் வேண்டும் என்பது எமது பெருவிருப்பமாகும்.

எனவே, அன்பான சிறுவர்களே! ''தமிழ் சிறுவர் தினம்'' உங்களுக்காகவே சிருஷ்டிக்கப்பட்டது, இதனை ஆண்டுதோறும், எதிர்காலத்தில் நல்லபடியாகக் கொண்டாடவும், அதன்மூலம், தமிழ்மண்ணில் இருக்கக்கூடிய சிறுவர்கள் மத்தியில் நல்லெண்ணங்கள், நல்நோக்கங்களைப் பரப்ப வழிகோலுங்கள் என அன்பாக வேண்டுகின்றோம்.

தமிழ் சிறுவர் தினம்—உங்கள் தினம்.

'அறவழி'

# ''அறநெறிக்காவலர்''

பேராசிரியர் நேசையாவின்

## ஆசிச்செய்தி

''நமது சிறுவர்கள் தாம் ஒரு நீண்ட பெரும் பண்பாட்டுப் பாரம்பரியத்தினுடைய புதல்வர்கள் என்பதனை அறிந்துகொள்ளச் செய்வதுடன், அந்தப் பண்பாடு சமய விழுமியங்கள்மீது கட்டியெழுப்பப்பட்டதொன்று என்பதையும் உணரச் செய்தல் வேண்டும். அதோடு எமது பண்பாடு வணக்கத் திருத்தலங்களை உள்ளடக்கியது என்பதற்குச் சான்றாக எமது நகரங்களிலும். கிராமங்களிலும் சென்றவிடமெல்லாம் வழிபாட்டு நிலையங்களைக் காணமுடியும்.

வழிபாடும், சாந்தியும், சமாதானமும் நல்லெண்ணமும் கொண்ட நற்பிரஜைகளை உருவாக்கும் பண்பாடு இது என்பதை எமது சிறுவர்களுக்கு அறியத்தருதல் வளர்ந்தோரின் கடமையாகின்றது.

மானிடத்தின் மேன்மையை உணர்த்துதலும் உலகம்பற்றிய புரிந்துணர்வை வளர்த்தலும் சமரசத்தைக் கட்டியெழுப்புதலும் இன்றைய காலகட்டத்தில் இன்றியமையாத் தேவைகளாகவிருக்கின்றன.

இதனை எம் சிறுவர்களுக்கு விசேடமாக எம் தமிழ்ச்சிறுவர்களுக்கு உணரச் செய்து அவர்களை நல்லாற்றுப்படுத்தும் முயற்சியில் நாமனைவரும் ஈடுபடவேண்டுமென அன்புடன் வேண்டுகின்றேன்.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற எமது முன்னோர்களின் இலட்சியம் நமது சிறுவர்களிடத்தும் ஆழ்ந்து வளர வேண்டுமென வாழ்த்தி இறைவனின் ஆசீர்வாதத்தை வேண்டி நிற்கிறேன்.''

பேராசிரியர் கு. நேசையா




# அறமொழி

செயலலை விதையுங்கள்
பழக்கம் உருவாகும்
பழக்கத்தை விதையுங்கள்
குணம் உண்டாகும்
குணத்தை விதையுங்கள்
உங்கள் எதிர்காலம்
உருவாகும்.

## அன்பும் அறிவும்

அன்பும் அறிவும் அடக்கமுமே
அமைந்திடும் வாழ்வை வகுத்திடுவோம்
துன்பமும் துயரும் தொல்லேயுமே
தொடர்ந்து வராமல் காத்திடுவோம்.

பகையும் பசியும் பல்பிணியும்
வாரா வண்ணம் துதித்திடுவோம்
வாய்மை நேர்மை ஒழுக்கமுமே
வந்து பொருந்திட வாழ்ந்திடுவோம்.

—தே. தேவலக்ஹினி,
சரசாலே,

## 1-2-3-4-5

இரண்டு சதம் கொண்டு சென்று
மூன்று கடை ஏறி
நாலு பழம் வாங்கிக்கொண்டு
நாங்கள் வரும் வழியில்
வள், வள் என்று
ஐந்து நாய்கள் கடிக்க வர—எம்மை தேடி
ஆறு கல் எடுத்து வீசி விட்டோம்
மெல்ல உருண்டு, உருண்டு
சிரித்துக் கொண்டு
ஏழு பேருமாக
எட்டு மணி வண்டியிலே
கஷ்டப்பட்டு ஏறி
ஒன்பது மணி போல் வீடு வந்து
உணவருந்தி மகிழ்ந்து
பத்து மணிபோல் நாங்கள்
படுத்து உறங்கினேம்.

ஆரூரன்,
சரசாலே.

## லட்டும் தட்டும்

வட்டமான தட்டு
தட்டு நிறை லட்டு
லட்டு மொத்தம் எட்டு
எட்டில் பாதி விட்டு

எடுத்தான் மீதம் கிட்டு
மீதம் உள்ள லட்டு
முழுதும் தங்கை பட்டு
போட்டாள் வாயில் பிட்டு

கிட்டு நான்கு லட்டு
பட்டு நான்கு லட்டு
மொத்தம் தீர்ந்த தெட்டு
மீதம் காலித் தட்டு.

## சத்தியம் எனும் நெறி

இப்புவியில் என்றும் தளைத்தோங்க
நித்தமும் பணிகள் ஆற்றும்
அறவழி போராட்டக் குழுவே
நித்திலம் போலும் உங்கள்
நற்போதனைகளை நாமேற்று
இத்தரணியிசை வாழ்வில்
பெரு ஏற்றம் அடைவோம்.

செல்வன் ச. முரளி;
ஊரெழு.

# A CHILD'S PRAYER

Father lead me, day by day
Ever in Thine own sweet way;
Teach me to be pure and true,
Show me what I ought to do.

When I'm tempted to do wrong,
Make me steadfast, wise and strong;
And when all alone I stand,
Shleld me with Thy mightly hand.

When my heart is full of glee
Help me to remember Thee—
Happy most of all to know
That my Father loves me so.

May I do the good I know,
Be Thy loving child below;
And at last go home to Thee,
Evermore Thy child to be.

**Anonymous.**

# MY VILLAGE

My Village is Urelu
It is a small village
There are two Schools
in our village
Most are hindus in
our village.

**I. Thusyanthy.**

The Worlds' most
precious Resource:
It's Children.

# GOD IS GOOD

God is so good that He will hear
Whenever children humbly pray;
He always lends a gracious ear
To what the youngest child may say.

His own most Holy Book declares
He loves little children still;
And that He listens to their prayers,
Just as a tender father will.

**Jane Taylor.**

# நமது குழந்தைகள்

சகல நாடுகளின் குழந்தைகளும் யுத்தக் கொடுமைகளை அனுபவியாதிருப்பதற்கும், குழந்தைப் பராயம் அமைதியும் ஆனந்தமுமாய் இருப்பதற்கும் உத்தரவாதமளிப்பது நமது கடமை.

துரதிஷ்ட வசமாக உலகில் இன்னமும் துப்பாக்கி. வேட்டொலி கேட்கிறது. ரத்தம் சிந்தப்படுகிறது, பெரியவர்கள் மட்டுமல்ல குழந்தைகளும் கொல்லப்படுகிறார்கள். பட்டினி பிணி ஆகியவற்றால் ஏராளமான குழந்தைகள் மரணமடைகிறார்கள். இது சகிக்க முடியாதது. நாம் குழந்தை பராய ஆண்டுகள் ஆரோக்கியமானதாக ஆனந்தமயமானதாக இருப்பதற்கு எம்மாலான அனைத்தையும் செய்யவேண்டும் குழந்தை வளர்ப்பு நிலையங்கள், ஆரம்பப் பள்ளிகள், என்பவை ஆயிரக்கணக்கில் நிர்மாணிக்கப்படவேண்டும். அன்பாக, சிந்தனை பூர்வமாக வாழ்வதற்கும் சகல இன, நிற மக்களுடன் நல்லுறவுடன் வாழ்வதற்கும் பொது நன்மைக்காக உழைப்பதற்குத் தமது அறிவைப் பயன்படுத்தவும், உழைப்பைக் கௌரவிக்கவும் குழந்தைகளுக்கு நாம் போதிக்கவேண்டும்.

**காளி ஜெயகௌரி,**
மறவன்புலவு.

# காந்தி அடிகள்

காந்தி அடிகள் இந்தியாவில் பிறந்தார். இவர் இந்தியாவின் சுதந்திரத்திற்கு அரும்பாடு பட்டவர். அகிம்சை வழியைக் கையாண்டு வெற்றி கண்டவர்.

அவர் எந்நேரமும் கதர்வேட்டியையும் சால்வையையும் அணிவார். மூக்குக்கண்ணாடி ஒன்று போட்டிருப்பார். அவர் வயோதிபமாய் இருந்ததால், இவரைக் காந்தித் தாத்தா என்று செல்லமாக அழைக்கின்றோம்.

அவர் எல்லோரிடமும் அன்புள்ளவர். சிறுவர்களில் மிகவு அன்புள்ளவர். காந்தியடிகள் மறைந்தாலும் அவரின் புகழ் இன்றும் மறையாமலிருக்கின்றது.

சி. சர்மிலன்,
பல்லவராயன்கட்டு.

---

# சிறுவர்கள்

ஓடி விளையாடும் சிறுவர்களுக்கும் ஓய்வு பெற்ற பெரியவர்களுக்கும் இருக்கும் வேறுபாடு வளர்ச்சி. பெரியவர்கள் வளர்ந்துவிட்டவர்கள். இனிமேற்கொண்டும் வளர்ச்சி பெற முடியாதவர்கள்; தளர்ச்சிதான் அவர்களை எதிர்நோக்கியிருக்கும்.

ஆனால்—சிறுவர்கள் வளர்பவர்கள். வளர்ந்துவிட்டதைக் காட்டிலும், வளர்வதைத்தான் அக்கறையுடன் கவனிக்கவேண்டியிருக்கிறது.

மாமரம் செடியாக இருக்கும்போது அதனை எவ்வளவு அக்கறையுடன் வளர்க்கின்றோம். அதற்குத் தினமும் நீர் ஊற்றுகின்றோம். மண்ணை நன்கு கிளறிவிடுகின்றோம். பசளையிடுகின்றோம்.

ஆடு, மாடு கடித்து விடாதவாறு வேலி போடுகின்றோம்.

இவையெல்லமே இல்லையெனில செடிகள் பெரும்பாலும் நல்ல மரங்களாக பயன் தரும் மரங்களாகத் திகழ்வதில்லை.

சிறுவர்களும் அத்தகையவர்களே! சிறுவர்களுக்கு நல்ல உணவு அளித்து, உடையணிவித்து, ஒழுக்கங்களைக் கற்பித்து நல்லறிவு பெறச் செய்யவேண்டும்.

இவற்றையெல்லாம் அக்கறையுடன் கவனித்துச் செய்யாவிட்டால் — சிறுவர்கள் மனிதர்களாகலாம்—ஆனால் — நல்ல பிரஜைகளாக வருங்கால உலகை வாழ்விக்கும் சான்றோராகத் திகழ முடியாது.

# இலட்சிய மனிதன்

மனம் போன போக்கிலே விடாமல் நல்வழி காட்டுவது அறிவு. அந்த அறிவை அளிப்பது கல்வி. மன இருளைப்போக்கி இலட்சிய வாழ்வுக்கு வழிப்படுத்துவது கல்வியே. சமுதாயம் ஓர் உத்தம பிரஜையை எதிர்பார்க்கிறது. பெறுவதும் பேணுவதும் அன்னையின் பொறுப்பு. சான்றோன் ஆக்குவது தந்தையின் கடமை. நல்வழி நடத்துகிறார் ஆசிரியர். சமுதாயம் ஒவ்வொருவரையும் எடை போடுகிறது. எனினும் பக்குவமான வாழ்வின் அடிநாதம் மாணவப் பருவமே. இன்றைய இளம் சமுதாயம் வருங்காலச் சிற்பிகளே. இதனை உருவாக்கும் தொழிற்கூடம் கல்விக்கூடமே.

த. சத்தியநிதி,
ஊரெழு.

---

# கலப்படம்

சந்தையில் வியாபாரிகள் எது எதையெல்லாமோ எதில் எதிலோ கலக்கின்றார்கள். இந்தக் கலப்படம் எப்படி?

| | | |
|---|---|---|
| Aணி. | Kள்வி, | Iன்மம், |
| Cகரம், | Oடு, | Eறும்பு, |
| Pத்தளை, | Rர்மோனியம், | Pள்ளை. |

செ. மனோசாந்தி,
கெற்பலி.

---

# காட்டுச் சிறுவன்

உகண்டாவில் ஒரு காட்டில் தன்னந் தனியாக ஓர் அனாதைச் சிறுவனைச் சில சிப்பாய்கள் கண்டனர். ஆனால் அவன் விசித்திரமான பழக்கங்களைக் கொண்டிருக்கிறான். புல் தின்கின்றான். மரத்தை எலிமாதிரிக் கடிக்கின்றான். மிருகங்களைப்போல ஊளையிடுகின்றான். மிருகங்களைப்போல கைகளை ஊன்றி மண்டியிட்டு நடக்கின்றான். சிப்பாய்கள் அவனுக்கு 'ராபர்ட்' என்று பெயர் வைத்திருக்கிறாள்.

# இந்திரா காந்தி

உலகத்தின் பெரும் தலைவர்களுள் ஒருவராகிய இந்திரா காந்தி அன்னையை குழந்தைகளாகிய நாங்கள் எல்லோருமே அறிவோம்.

நேரு மாமாவின் செல்லப்பிள்ளையாக இவர் பிறந்தார்.

காந்தித் தாத்தாவின் செல்லத்துக்கும் அன்புக்கும் பாத்திரமானார்.

அவர் காட்டிய வழியில் நடந்து உலக சமாதானத்துக்கு அரும்பாடு பட்டார்.

ஈழத்து தமிழ் மக்களின் இன்னலைத் துடைப்பதற்கு அவர் எடுத்த முயற்சிகள் கணக்கில் அடங்காதவை ஆகும்,

இத்தகைய எங்கள் இதயம் கவர்ந்த அன்னை இந்திரா காந்தி 1984ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ம் திகதி சீக்கிய பிரிவினைப் பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதனைக்கேட்டு கலங்கி கண்ணீர் வடிக்காத மக்கள் எவரும் இல்லை.

அன்னை இந்திராவைப் போல் வீரமிக்க அன்னையைக் காண்போமா? இல்லவே இல்லை,

— க. அருட்குமார்,

சரசாலை.

---

# முதல் தமிழ் சிறுவர் பத்திரிகை

முதல் முதல் தமிழ்ச்சிறுவர் பத்திரிகையானது இந்தியாவில் 1840ம் ஆண்டு வெளியிடப்பட்டது,

யாழ்ப்பாணத்தில் 1859ல் "பாலியர் நேசன்" எனும் தமிழ்ச்சிறுவர் பத்திரிகையை வண. ஈ. பி. ஹேஸ்டிங்ஸ் எனும் கிறிஸ்தவ பாதிரியார் வெளியிட்டார். நான்கு பக்கங்களை கொண்டிருந்த இச்சிறுவர் பத்திரிகையின் ஆண்டுச் சந்தா ஐம்பது சதமாக விருந்தது,

# சிறுவர்களுக்கான தியேட்டர்

சிறுவர்களுக்காகவே ஒரு தியேட்டர் கல்கத்தாவின் தென்பகுதியில் இருக்கும் டாகுரியா மேம் பாலத்தை அடுந்து அமைந்திருக்கும் சிறுவர்களுக்கான ஐந்தடுக்குக் கட்டிடத்தில் அமைந்துள்ளது.

சிறுவர்களுக்கான சித்திரங்களும் இலக்கியமும் படைத்துள்ள 'அவனீந்திர நாத் தாகூரி'ன் நினைவாக இக்கட்டிடத்துக்கு "அபன் மஹால்" என்று பெயரிடப்பட்டுள்ளது.

இது வெறும் தியேட்டர் அல்ல. இசை, நடனம், நாடகம், சித்திரம் முதலிய பல துறைகளில் சிறுவருக்குப் பயிற்சியளித்து அவர்கள் கூடி வாழக் கற்றுக்கொடுக்கும் ஓர் இயக்கமுமாகும். ஐந்து வயது முதல் பதினான்கு வயது வரையுள்ள சுமார் எழுநூறு சிறுவர் இதில் உறுப்பினராகிப் பயனடைந்து வருகின்றனர்.

---

# குழந்தைகளும் நூல்களும்

குழந்தைக்கு மிகவும் பிடித்தது விளையாட்டுக் கருவி. விளையாட்டுக் கருவிகள் பல. அவற்றுள் ஒன்று புத்தகம். விளையாட்டுக் கருவி குழந்தைக்கு வேடிக்கை காட்டும். மகிழ்ச்சி தரும். புத்தகம் அவற்றோடு விவேகத்தையும் வளர்க்கும்.

படிக்கத் தெரியாத குழந்தை புத்தகத்தை வைத்துக்கொண்டு விளையாடத் தொடங்கும். உடனே "அப்படிச் செய்யக் கூடாது" என்று சிலர் தடுப்பதுண்டு. அது தேவையன்று. குழந்தைகளைப் புத்தகங்களுடன் விளையாடவிடவேண்டும். முதலில் புத்தகங்களுடன் விளையாடும் குழந்தைகள்தான் பிறகு விரும்பிப் படிக்கும். படிக்கும் பழக்கம் ஏற்படக் குழந்தைகளைப் புத்தகங்களுடன் பழக விடவேண்டும்.

# காக்கை



காக்கை நல்ல காக்கையடா
கறுப்புநிறக் காக்கை
வாழ்க்கையிலே மாந்தருக்கு
வழி காட்டும் காக்கை

காலையிலே ஊரையெல்லாம்
துயிலெழுப்பும் காக்கை
மாலையிலே குளித்துவிட்டு
மனையடையும் காக்கை

வண்ணமிகு கருஞ்சிறகில்
பாரதியாருக்கு
கண்ணனது திரு வுருவைக்
காட்டியதோர் காக்கை

வள்ளுவனர் திருக்குறளில்
வந்திருக்கும் காக்கை
கொள்ளும் இரை சிறிதெனினும்
கூடியுண்ணும் காக்கை

பாட்டிதனை ஏமாற்றிப்
பறித்த வடை தன்னை
காட்டு நரியிடங் கொடுத்து
ஏமாந்த காக்கை

சனியனுக்கு வாகனமாய்த்
தானமைந்த தேனும்
மனிதனுக்கு வழிகாட்டிம்
மாண்புடைய காக்கை

காக்கையிடம் இருக்கின்ற
ஒற்றுமையை என்றும்
வாழ்க்கையிலே கடைப்பிடித்தால்
வளம் பெறலாமன்றோ

சுப கலாவதி

# மரம் வளர்ப்போம்

மரங்கள் இருந்தால் மழைபெய்யும்
மழை பெய்தாலே மரம் வளரும்

மரமும் மழையும் இருந்தால்தான்
மங்கா வளங்கள் நாம் பெறுவோம்

வீட்டுக் கொருமரம் வளர்ப்போம்
விடுவோம் தண்ணீர் தினம், தினமே

மரமும் வளரும் நாமும் வளர்வோம்
மனமகிழ்கொள்வோம் அதைக்கண்டு

நாடு செழிக்க நம்பங்கு
நல்ல ஒரு மரம் வளர்ப்பதுவே.

கி. செல்வக்குமார்.

# 7 + 7 = 14

ஏழும் ஏழும் பதினலாம்
எலியா ருக்கு முழம்வாலாம்

அறைக்குள் எலியார் புகுந்தாராம்
அங்கும் இங்கும் பார்த்தாராம்

இரண்டு தட்டில் பணியாரம்
இருந்தது கண்டு மகிழ்ந்தாராம்

கடித்துக் கடித்துத் தின்றாராம்
கணக்கைக் கூட்டிப் பார்த்தாராம்

ஏழும் ஏழும் பதினலாம்
எலியார் ஏம்பம் விட்டாராம்

அழ. வள்ளியப்பா

## வாழை

வாழை நல்ல வாழையாம்
பழங்கள் தரும் வாழையாம்
சிறுவர் நாங்கள் கூட்டமாய்
தின்று மகிழும் வாழையாம்

த. கனகாம்பாள்,
பல்லவராயன்கட்டு

# வன்முறை பற்றி வினோபாஜி

இன்றுவரை நம்மிடையே சிறந்தவர்களாக கருதப்படுவோரின் அறிவும் ஆற்றலும் வன்முறைக்கான வழிமுறைகளை மேலும் மேலும் வளர்த்து பலப்படுத்துவதிலேயே பயன்படுத்தப்பட்டு வருகிறது,

விஞ்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சியை அழிவுப் பாதையிலேயே செலுத்திவருகின்றனர். அறிவியல் ஆராய்ச்சி முதலாளித்துவ சமூகங்களுக்குமட்டுமே உரியதல்ல.

முதலாளித்துவ சமுதாயத்துக்கு முந்திய சமுதாயத்திலும்கூட அறிவியல் ஆராய்ச்சிகள் நடத்துள்ளன. வில்—அம்பிலிருந்து தொடங்கி அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டுகள் அளவுக்கு வளர்ந்துள்ள கண்டுபிடிப்புக்களை எண்ணிப்பாருங்கள்.

வன்முறைக்காக எவ்வளவு மூளையைச் செலவிட்டு, எவ்வளவு ஆராய்ச்சி செய்து கணக்கற்ற அழிவுக்கருவிகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்! இதற்கும் மேலாக முதலாளித்துவம், பொதுவுடமை போன்ற இன்னும் பல தத்துவங்களையெல்லாம் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஒரு சில கருத்துக்களை சமூகத்தின்மீது திணிக்கவே இவை உருவாக்கப்பட்டுள்ளன. ஒரு பக்கம் உயர்ந்த தத்துவங்கள் உருவாகிக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் மறுபுறம் அழிவுக் கருவிகளின் உற்பத்தியும் அளவின்றி நடைபெறுகிறது.

ஒவ்வொரு அரசாங்கமும் மக்களின் கல்விக்காகச் செலவிடுவதைவிட பல மடங்கு தொகையை ராணுவத்துக்காகச் செலவிடுகிறது''.

தொகுப்பு— **எம். மாணிக்கம்**, மதுரை.

## விளையாட்டு வீரனுக்கு பத்துக் கட்டளைகள்

சிறுவர்கள் பலதுறைகளிலும் ஈடுபட்டு, தமக்கும், தம் இனத்தின் முன்னேற்றத்துக்கும் பாடுபடல் வேண்டியது மிகவும் முக்கியமாகும். விளையாட்டுத்துறைகளில் ஈடுபடும் சிறுவர்கள் அவசியம் அறிந்துகொள்ளவேண்டிய பத்துக் கட்டளைகள் இதோ:—

1. விளையாட்டில் வெல்வது மட்டுமே முக்கியமல்ல. முறைப்படி விளையாடுவது தான் சிறப்பு.
2. விலையாட்டுத்திடலை எப்பொழுதும் ஒரு கோயிலாகக் கருது.
3. உனக்காக விளையாடாதே. உன் குழுவிற்காக விளையாடு.
4. நடுவர்களின் தீர்ப்புக்குத் தலை வணங்கு.
5. மாற்றாரின் சிறப்பைப் போற்றப்பழகு.
6. வெற்றியால் பெருமைகொள், ஆனால் மமதை கொள்ளாதே.
7. விளையாட்டைக் கருதி விளையாட்டில் ஈடுபடு.
8. வென்றவனைப் பாராட்டு: தோற்றவனைச் சீராட்டு.
9. ஓடு, ஓடு, இறுதிவரை சளைக்காமல் ஓடு. தாவு, தாவு, முடிந்தவரை துணிவாகத் தாவு.
10. கடமையைச் செய்: பயனை எதிர்பாராதே! பயன் என்பது உழைப்போடு வரும் நிழல் [illegible]கும்.

## வருடந்தோறும் ஒன்றரை கோடி சிறுவர் இறப்பு!

வருடந்தோறும் ஒரு கோடியே ஐம்பது லட்சம் சிறுவர்கள் மரணமடைந்துவருவதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தொகையானது மொத்த மரணத்தில் நான்கில் ஒரு பகுதியாகும். குறிப்பாக ஐந்து வயதுக்கு உட்பட்டவர்களே இந்த மரணத்தில் அடங்குவர்.

குடிநீர் சுத்தமற்ற நிலைமை. போசாக்கின்மை, சுகாதாரச்சீர்கேடு ஆகிய அம்சங்களே இம்மரணங்களுக்குக் காரணம் என்றும். இவ்வாறான இழப்புக்கள் பின்தங்கிய நாடுகளிலும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் ஏற்படுவதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

## காந்தியின் படம்

மகாத்மா காந்தியின் படம் நம் அனைவரது வீடுகளிலும் இருத்தல் மிக அவசியம்:

காந்தி மகானின் உருவப்படத்தைப் பார்க்கும்போதெல்லாம் தெய்வபக்தி — தேசபக்தி, சத்தியம், அன்பு, அறவழி, கடமை உணர்வு. காலந்தவறாமை, தூய்மை, எளிமை போன்ற பல நல்ல பண்புகளை நாமும் கடைப்பிடிக்கவேண்டும் என்ற உணர்வு எம் மனத்தில் தோன்றும்.

நாள் ஆக, ஆக, அந்த உணர்வே நம்மை மென்மேலும் உயர்த்தும்.

# சிந்தனைக்குப் பத்து இல: 3

**வாசகர்களே!**

''சிந்தனைக்குப் பத்து'' எனும் பகுதிக்கு வாசகர்களிடம் இருந்து போதியளவு பதில்கள் கிடைக்காமல் இருக்கின்றது. ''அறவழி'' பத்திரிகையின் இளம் வாசகர்களுக்கு ஒரு சவால் முயற்சியாகவே இப்பகுதி அமையவேண்டும் என்பது எமது விருப்பமாகும். எனவே, இளம் வாசகர்கள் இப்பகுதியை மேலும் வளர்த்தெடுக்க, ஆதரவு வழங்க முன்வரும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

''சிந்தனைக்குப் பத்து'' இல: 1, 2, க்கான பதில்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன; பதில்கள் இங்கே அனுப்பியவர்களுள், சரியான பதில்களை அனுப்பிய வர்களின் விபரம் இங்கே தரப்பட்டுள்ளன. இவர்களுக்கான பரிசில்கள் அனுப்பிவைக்கப்படும்,

இல, 1 பதில்கள்

1. லூயி பிரெயில் 2, மத்திய பிரதேஸ் 3. கிரோசிமாவில் விழுந்த அணுகுண்டு 4, 24-10-1945 5. சர்வதேச சமாதான சேவை இயக்கம் 6. 50 சதம்.
7. அறவழிப்போராட்டக் குழு 8. 1983 ஆடிக் கலவரத்தால் பாதிப்புறறவர்களுக்கு 9. பனம் பொருள் அபிவிருத்தி சபை 10, கிறிஸ்தவ சமயம்.

பரிசு பெறுபவர்: 1—இரா. கணேசன், மாங்குளம், வவனியா.
2, எம். சாந்தா, கச்சாய் வீதி, சாவகச்சேரி

இல. 2. பதில்கள்

1. 1979 2. முசோலினி 3. மகன் (ராம்தாஸ்) 4. பனை ஓலை, எழுத்தாணி 5. ஸ்கெண்டிநேவியா 6. நல்லூர் 7. கோலாலம்பூர் (மலேசியா) 8. 1958, 1977, 1983 9. நாவற்குழி இராணுவ முகாம் 10. 37.

பரிசு பெறுபவர்:

1. எஸ். ரவிகுமார். கைதடி, நுணுவில், சாவகச்சேரி.
2. நீ. சிவானந்தன், நீலங்காடு, காரைநகர்.

உல: 3. வினுக்கள்

1. உலகில் வைரம் அதிகமாக கிடைக்கும் நாடு எது?
2. சர்க்கரையைச் சுத்தம் செய்து அதன் நிறத்தை வெண்மையாக்குவது எது?
3. விதையிலிருந்து இலையோ, வேரோ முதலில் வருகின்றது?
4. பறக்கமாட்டாத நான்கு பறவைகள் எவை?
5. மனிதனுக்கு மிக உபயோகமான மூன்று பூச்சிகள் எவை?
6. சம இரவு தினங்கள் எவை?
7. கோப்பி விளைவுக்கு பேர்போன நாடு எது?
8. சாந்தி நிகேதன் என்பது என்ன?
9. லும்பினியில் பிறந்து, காயாவில் நிர்வாண மடைந்து, குஷிநகரில் உயிர் நீத்தவர் யார்?
10. கிறிஸ்துநாதர் சிலுவையில் அறையப்பட்டது எப்போது?

முகவரி:

| |
|---|
| **சிந்தனைக்குப் பத்து இல: 3.**<br>த. பெ. இல. 2.<br>சாவகச்சேரி. |

முடிவு திகதி 05—01—1987.

## காக்கையாரே

காலை விடியுமுன்னே காக்கையாரே—நீர்
'கா கா' என்று கரைவதேனோ காக்கையாரே—நீர்
மாலை வருமுன்னே காக்கையாரே—நீர்
மாயமாய் மறைவதெங்கே காக்கையாரே—நீர்

பகலெல்லாம் பறக்கின்ற காக்கையாரே—நீர்
இரவெல்லாம் எங்கே இருப்பீர் காக்கையாரே?
தெருவெல்லாம் திரிகின்ற காக்கையாரே—நீர்
தின்பதெல்லாம் தித்திக்குமோ காக்கையாரே?
கூடுகட்டி வாழ்கிறீரோ காக்கையாரே—நீர்
கூடி எங்கே வாழ்கிறீரோ? காக்கையாரே!

க. கோகுலதாஸ், பல்லவராயன்கட்டு.

## NO MORE CHILDREN

Mala was sent to bed without dinner by her mother as she had been naughty. while she was saying her night prayers, her mother happened to pass by and heard her saying, "Thank you, God, for everything, and Bless my parents too.

But, please do not send them any more Children, as they do not know how to treat the children, they already have"

**Miss Mohini.**

# சிறுவர் உரிமைப் பொருத்தனை

இன்றைய சிறுவர்கள் தான் நாளைய தலைவர்கள். அப்படிப்பட்ட சிறுவர்கள் தமது இளமைப் பராயத்தை ஆரோக்கியமற்ற விதத்தில் கழித்தால் அதனுல் நாட்டுக்கே பாதகம் ஏற்படும் என்பது திண்ணம். எனவே அவர்களை பேணிக் காப்பாற்றுவது சகலரினதும் அத்தியாவசிய கடமையாகும்.

ஐக்கிய நாடுகள் சபையினுல் 1951ம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட "சிறுவர் உரிமைப் பொருத்தனை"யின் முக்கிய அம்சங்கள்:—

- ஒவ்வொரு குழந்தைக்கும் சுகாதாரவசதி பெறவும், சத்துணவு பெறவும்,
- குழந்தை சுதந்திரமாகவும். கண்ணியமாகவும் வாழவும், உள, உடல், ஆத்மீக உணர்வுகளை விருத்தி செய்யவும்.
- தனக்கென எரு பெயருக்கும் ஒரு தேசிய இனத்துக்கு உரித்தாகவும்.
- உடல் ரீதியாகப் பாதிக்கப்படாமல், விசேட கவனமும், பராமரிப்பும் பெற்று வாழவும்.
- உடல், உளரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கும் குழந்தைகள் விசேட பராமரிப்பு, கல்வி, சிகிச்சை பெறவும்.
- குழந்தையானது தனது ஆளுமை, வளர்ச்சி, அன்பு, புரிந்துணர்வினை அபிவிருத்தி செய்து வாழவும்.
- இலவச, கட்டாயக் கல்வியைப் பெறவும் சமசந்தர்ப்பம் மூலம் தனது கலாச்சாரத் திறமைகளை வளர்த்துக்கொள்ளவும்.
- சகல சூழ்நிலைகளிலும் பாதுகாப்பையும். நிவாரணத்தையும் முதலில் பெறவும்.
- கவனிப்பற்ற தன்மை, கொடுமை, சுரண்டலுக்கு எதிராகப் பாதுகாக்கப்படவும், உரிய வயதெல்லை வருமுன்னர் குழந்தையின் கல்வி, சுகாதாரம் பாதிப்படையாமல் வாழவும்.
- இன, மத, மற்றெவ்விதமான பாரபட்ச நிலைகளுக்கு எதிராகவும் பாதுகாக்கப்பட்டு, புரிந்துணர்வு, சகிப்புத் தன்மை, நட்புறவுடன் ஏனைய மக்களுடன் சமாதானமாகவும், சகோதரத்துவத்துடனும் வாழவும் உரித்துடையவர்களாவார்.

## அறவழி மகளிர் மலர்ச்சிக் கழகம்

அறவழிப் போராட்டக் குழுவின் மகளிர் அணி "அறவழி மகளிர் மறுமலர்ச்சிக் கழகம்" எனும் பெயரில் கடந்த மாதம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அறவழி இயக்குனர் திருமதி கனகம்மா தங்கராசா தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தின்போது யாழ். மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த 75 மகளிர் பங்குகொண்டிருந்தனர்.

அறவழி மகளிர் மறுமலர்ச்சிக் கழகத்தின் நிருவாகிகள் பின்வருமாறு:—

தலைவர்: திருமதி விசாலாட்சி இராமலிங்கம். உபதலைவர்கள்; திருமதி கார்த்திகேசு நிர்மலாதேவி, திருமதி முருகையா வள்ளியம்மை. பொதுச்செயலாளர்: திருமதி செல்வஜோதி உஷா. துணைச்செயலாளர்கள்: செல்வி மகாலிங்கம் சசிதேவி, திருமதி காந்தன் சாந்தா. பொருளாளர்: செல்வி தம்பிமுத்து இந்திராதேவி. இணையமைப்பாளர்: செல்வி தர்மினி வீரசிங்கம், செல்வி ராகினி கந்தையா.

மற்றும் 14 பேர் கொண்ட நிர்வாகக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## குருவி

ஒரு குருவி ஊரை அழைக்க
இரண்டு குருவி பந்தல் போட
மூன்று குருவி மேளம் தட்ட
நான்கு குருவி நாதஸ்வரம் வாசிக்க
ஐந்து குருவி மஞ்சள் அரைக்க
ஆறு குருவி ஆட்டங்கள் ஆட
ஏழு குருவி ஏணி மேல் ஏற
எட்டுக்குருவி எட்டி எட்டிப்பார்க்க
ஒன்பது குருவி ஒய்யாரமாய் பாட
பத்துக் குருவி குதித்தே பாட
குருவிக் கல்யாண வைபோகமே.

**செல்வி து. அமுதினி**
நுணுவில் மேற்கு,
சாவகச்சேரி

## மொண்டிசோரிக் கல்வி முறை

இது மொண்டிசோரி என்னும் இத்தாலிய அம்மையாரால் சிறுவருக்குக் கல்வி பயிற்றுவதற்கு வகுக்கப்பட்ட கல்வி முறை குழந்தைகளுக்கு குழந்தைப் பருவத்திலேயே பொறுப்புணர்ச்சி உண்டாக்கி அதன்மூலம் கட்டுப்பாட்டு ஒழுங்கைச் செய்வது இதன் முக்கிய நோக்கம். இப்பள்ளிகளில் குழந்தைகள் பிறருக்குத் தீங்கு செய்யாத முறையில் தம் விரும்பம்போல் நடமாட அனுமதிக்கப் படுகின்றனர். இப்படிச் செய்வதால் குழந்தைகள் பெரியவர்கள் போலவே ஒழுங்காகக் கட்டுப்பாட்டு உணர்ச்சியுடன் நடந்துகொள்கின்றனர். மொண்டிசோரிப் பள்ளியில் ஒவ்வொழி குழந்தையும்தானே தனக்குக் கற்பித்து கொள்கிறது. ஆசிரியை அதற்கு வழி காட்டியாக இருக்கிறுர். குழந்தை ஏதேனும் ஒரு செயலைப் புதிதாகச் செய்யத் தொடங்கும்போது ஆசிரியை அச்செயலைச் சரிவரச் செய்யவேண்டிய முறையைக் காண்பிப்பார்.

---

## குழந்தைகளை மனிதராக்கப் பெரும்பணி

பழைய காலத்து முனிவர்கள் பெரியவர்கள் தம்மையடைந்த சிறுவர்களைப் பெரியவராக்குவதில் ஆற்றல் பெற்றிருந்தார்கள். வாய்மொழி என்னும் உபதேசத்தாலும். தொடுதல் என்னும் தீட்சையினுலும், கடைக்கண் பார்வை என்றும் நயன தீட்சையாலும் நினைத்தல் என்றும் மானசீக தீட்சையாலும் முனிவர்கள் பெரும் காரியங்களைச் செய்தார்கள்.

இவை யாவும் புராண-இதிகாசக் கதைகயாயிருக்கலாம் எனக் கருதுபவர்கள், தயவு செய்து கிழக்குத் தமிழ்ப்பகுதியில் கல்லடி—உப்போடைப் பகுதியில் இராமகிருஷ்ணபுரம் அமைத்து குழந்தைகளைப் பாதுகாத்து மலர்த்தும் சுவாமியைச் சென்று பாருங்கள். இன்று கண் வருத்தம் உடலில் பல்வேறு வருத்தங்கள். அவர் சொல்லுகிறுர் இவை தமக்குப் பிராரத்துவம் என்றும் இவற்றை தாம் சகித்துக்கொள்ளவேண்டும் என்றும் ஆனுல் இவை தம்மைச் சேர்ந்தவர்களின் பாப நீக்கத்தால் தம்மீது சுமத்தப்பட்ட சுமையல்லவோ. அவர் எடுத்துச் சுமக்கிறுர் என்போம் அவர் இடையிடை கண் மருத்துவத்திற்காக கண்டிக்கும், கொழும்புக்கும் போனுலும் பிள்ளைகளை நேசங் காரணமாக நினைக்கும்போதே அவர்கள் மனிதராக உருவாகிறுர்கள். நினைத்தாலே போதும் நெஞ்சே! நீ நினையால். நெஞ்சத்து நினைப்பு எல்லாம் வல்ல மானசீக தீட்சை. பீமன் நினைத்தவுடனே கூட்டுப்பூக்கள் எல்லாம் கைலாசமலைபோல் சிவபெருமான் திருவடியில் குவிந்தன. நினைமின் மனதே.

( நன்றி — மில்க்வைற் செய்தி

---

## ஜக்குவும், புலியும்

ஒருநாள் காலை ஜக்குவும் அவரது மனைவியும் தமது குகைக்குள் இருந்து வெளியே வந்து இருந்தார்கள். அப்போது, ஜக்கு தனது மனைவியிடம், ''இன்று நாம் வெளியே போகவேண்டாம். இங்கேயே இருந்து பாட்டுப்பாடி நடனம் ஆடுவோம்'' என்று கூறினுர்.

அச்சமயம் ஜக்குவின் மனைவி, ''சரி நாம் இன்று அவ்வாறே செய்வோம்'' என்ருள். பின்னர் அவர்கள் தமது கைகளைத் தட்டி மகிழ்ச்சியுடன் ஆடிப்பாடினுர்கள்.

அவர்கள் அவ்வாறு ஆடிப்பாடிக்கொண்டிருக்கும்போது, ஒரு மரத்துக்குப் பின்னுல் ஒரு புலி மறைந்திருந்ததை ஜக்கு கண்டார். உடனே தனது மனைவிக்கு, அப்புலியைக்காட்டி, ''வா, வா, புலி இங்கே வந்துகொண்டிருக்கிறது. நாம் உள்ளுக்குப் போய்விடுவோம்'' என்று கூறி பயத்துடன் குகைக்குள் தனது மனைவியையும் இழுத்துக்கொண்டு ஜக்கு உள்ளே போய்விட்டார்.

புலி, ஜக்குவின் குகைக்கு அண்மையில் வந்து, ''ஜக்கு, வெளியே வா'' எனச் சத்தம் போட்டது.

அவ்வேளை ஜக்கு குகைக்குள் இருந்து ''இல்லை நான் வரவேமாட்டேன். நான் இப்போது சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்றது.

புலி:—''என்ன சாப்பிட்டுக்கொண்டிருக்கிறுய் ஜக்கு?''

ஜக்கு:—''நான் புலியின் இதயத்தைச் சாப்பிடுகிறேன்''

புலி:—''நீ எங்கே புலியின் இதயத்தை எடுத்தாய்?''

ஜக்கு:—''என்னுடைய நண்பன் ஒருவன் நேற்று காட்டில் ஒரு புலியைச் சுட்டு இங்கே கொண்டு வந்தான்''

புலி:—உன்னுடைய நண்பன் எங்கே?

ஜக்கு:—அவன் இங்கேதான் தனது துப்பாக்கியை சுத்தம் செய்துகொண்டிருக்கிறுன்.

புலி;—அப்படியா?

ஜக்கு:—ஆம் அவன் இன்றும் ஒரு புலியை சுடப் போகின்றுனும்,

இதனைக்கேட்டதும் புலி ஓட்டம் பிடித்தது.



# தமிழ் சிறுவர் தினம்

## நிகழ்ச்சிகள்

அறவழிப் போராட்டக்குழுவினால் பிரகடனப்படுத்தப்பட்ட பிரகாரம் ''தமிழ் சிறுவர் தினம்'' டிசம்பர் 15ம்திகதி கைதடி நுணாவிலில் அமைக்கப்பட்ட விசேட மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

தமிழ் சிறுவர் தின விழா நிகழ்ச்சிகள் பின்வருமாறு:—

★ மங்கள இசை
★ சிறுவர்களின் சமாதான ஊர்வலம்
★ சிறுவர்களின் பிரார்த்தனை
★ சிறுவர் பொதுக்கூட்டம்
★ சிறுவர் போசாக்கு விருந்து
★ சிறுவர் கலை நிகழ்ச்சிகள்
★ பொதுக்கூட்டம்
★ அறவழி சிறப்பிதழ் வெளியீடு
★ பரதநாட்டியம்
★ சுகாதார வில்லிசை
★ புல்லாங்குழல் இசை
★ பாலர் பாடசாலை விட்டுச் செல்லும் சிறுவருக்குப் பரிசில் வழங்கல்
★ நாடகம்—ஆசிரியைகள் குழாம்

இந்நிகழ்ச்சிகளின்போது பிரதம விருந்தினர்களாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் வி. எம். பஞ்சலிங்கம், கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம், அறநெறிக்காவலர் பேராசிரியர் கே.நேசையா பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. கே. நடராஜா உட்பட, இன்னும் பலர் பங்குகொள்கின்றனர்.

சிறுவர்களின் சமாதான ஊர்வலத்தின் முடிவில் சிறுவர்களினால் சமர்ப்பிக்கப்படும் மகஜர்களை பிரதம விருந்தினர்கள் பெற்றுக்கொள்வார்கள்.

1986ம் ஆண்டு அறவழி பாலர் பாடசாலைகளில் கல்வி கற்று அரச ஆரம்ப பாடசாலைக்குச் செல்லவுள்ள 350 சிறுவர்கள், இத்தினத்தில், பரிசுப்பொருட்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள்.

## வாழ்த்துகிறோம்!



1987

எமது நத்தார்
புது வருட
வாழ்த்துக்கள்
அனைவருக்கும்
உரித்தாகுக.

—அறவழி—

தமிழ் சிறுவர் தினத்தில் நடைபெறும் பாலர் நிகழ்ச்சிகள்:—

1. சோமாஸ்கந்தா—கிராமியநடனம்
2. சரசாலை—புதுமைப்பாரதி
3. நுணாவில் மேற்கு— அபிநயநடனம்
4. கரியாலை நாகபடுவான்—அபிநய நடனம்
5. சிங்கநகர்—குறவன் குறத்தி நடனம்
6. யார்க்கரு—கோலாட்ட நடனம்
7. பிட்டியெல்லை—மலையக அபிநயம்
8. கெற்பலி—கிறிஸ்மஸ் பரிசு
9. பூமகள்—வண்ணத்துப்பூச்சி நடனம்
10. செல்வநகர் —குருவிக்காரன் நடனம்
11. கள்ளிநகர்—மீனவ நடனம்
12. சமரபாகு ஏ—அபிநய நடனம்
13. அன்பாலயம் —குழுநடனம்
14. ஐங்கரன்—அபிநய நடனம்
15. அல்வாய்—தீப நடனம்
16. எழுதுமட்டுவாள்—குழு நடனம்
17. ஊரெழு—அபிநய நடனம்
18. வளர்மதி—ஆங்கில அபிநயம்
19. சமரபாகு பி —வில்லுப்பாட்டு
20. மறவன்புலவு —காவடி
21. மிருசுவில் —— சாலியன் அவை நாடகம்
22. நவபுரம்—கிராமிய நடனம்
23. நாரந்தனை தெற்கு — குழு நடனம்
24. வேலணை கிழக்கு—குழுநடனம்
25. வேலணை மேற்கு—வில்லுப்பாட்டு

## ※சிரிக்கும் குழந்தை மகிழ்ச்சியின் விம்பம்※

இப்பத்திரிகை அறவழிப் போராட்டக் குழுவினால், யாழ். புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1986 மார்கழி 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.